FACT SHEET

MAY,2026

# இலங்கையில் சிகரட் வரிவிதிப்பின் சமீபத்திய நிலைமைகள் மற்றும் அதன் தாக்கங்கள்

**2023 ஆம் ஆண்டில் சிகரட் மீதான வரி 20% அதிகரிக்கப்பட்டதன் காரணமாக:**

- **சிகரட் விற்பனை 521.5 மில்லியன் அளவில் குறைந்தது. இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18% குறைவாகும்.**
- **அரசாங்கத்திற்கு சிகரட்டினால் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ. 7.7 பில்லியன் அதிகரித்தது.**

சிகரட் வரி மற்றும் விலையை உயர்த்துவது என்பது, அதன் பயன்பாட்டையும் அதனால் ஏற்படும் விளைவுகளை குறைப்பதற்காகவும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஆதாரங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட ஒரு முறையாகும்.

உலக சுகாதார நிறுவனம் (WHO) பரிந்துரைத்துள்ள இந்த அணுகுமுறை மூலம், சிகரட்டுகளை கொள்வனவு செய்யும் திறன் குறைக்கப்பட்டு அதன் மூலம் பாவனை குறைகிறது. இதனால் நாட்டின் சுகாதாரச் செலவுகள் குறைக்கப்படுவதுடன், அரசாங்கத்திற்கு கிடைக்கும் சிகரட் மீதான வரி வருமானமும் அதிகரிக்க உதவுகிறது.

**எனினும்,**

- 2024-25 காலப்பகுதியில் பல அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் வரிகளும் உயர்ந்திருந்தாலும், சிகரட் மீதான வரி அதிகரிக்கப்படாமையினால் 2025ஆம் ஆண்டு சிகரட் உற்பத்தி 05% அதிகரித்துள்ளது.
- பணவீக்கத்திற்கு அமைவாக சிகரட் மீதான வரி அதிகரிக்கப்படாதமையினால் கொள்வனவு திறன், பாவனை ஆகியன அதிகரித்துள்ளது. இது கட்டுப்பாட்டுக்கொள்கையின் பலவீனத்தை சுட்டிக்காட்டுகின்றது.
- சிகரட் நிறுவனத்திற்கு சாதகமான அறிவியல் ஆதாரமற்ற வரிக்கொள்கையை பின்பற்றியமையினால் சிகரட் நிறுவனத்தின் இலாபம் அதிகரித்துள்ளது. சிகரட்டினால் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வரி வருமானம் 27.5% அதிகரித்திருந்தாலும், இலங்கை புகையிலை நிறுவனத்தின் இலாபம் 92.4% என்ற குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

## சிகரட் மீதான வரி நடைமுறைகள்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின் படி, சிகரட்டின் சில்லறை விலையில் குறைந்தது 75% வரியாக அமைய வேண்டும். இந்த பரிந்துரை இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், 2024 ஆம் ஆண்டில் அதிகமாக விற்பனையாகும் சிகரட் வகையின் வரி சதவீதம் 74.0% இலிருந்து 68.8% ஆக குறைந்துள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டிலும் இந்த நிலைமையில் எந்த மாற்றமும் இல்லாதது கவலைக்குரியதாகும்.

இந்த நிலைமை, புகையிலை வரிவிதிப்பின் மொத்த செயல்திறனை குறைப்பதுடன், புகையிலை தொழில்துறைக்கு அதிகளவான இலாபம் பெறுவதற்கான வாய்ப்பையும் உருவாக்குகிறது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில் சிகரட் சந்தையில் பல்வேறு வரி வகைகளுக்கு உட்பட்ட சிகரட் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்பட்டுள்ளன. சரியான வரிக் கொள்கை இல்லாத சூழ்நிலையில், புகையிலை நிறுவனம் அதிகமான நன்மை பெறும் நிலை உருவாகி, அந்நிறுவனத்தின் இலாபம் பெரிதும் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையினால், 2024 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் ரூபாய். 9.4 பில்லியன் வரி வருமானத்தை இழந்துள்ளதாக Verité Research நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

**Sources:**

The Case for Investing in WHO FCTC Implementation in Sri Lanka, Central Bank of Sri Lanka, Sri Lanka Customs, Verité Research

**Alcohol and Drug Information Centre**

40/18, Park Road, Colombo 5.


+94 112 584416, +94 112 592515

www.adicsrilanka.org

ADIC

Alcohol and Drug Information Centre

உலக சுகாதார அமைப்பின் புகையிலை கட்டுப்பாட்டு சர்வதேச ஒப்பந்தமான (WHO FCTC) படி, அனைத்து வகையான சிகரட்டுகளுக்கும் ஒரே மாதிரியான (ஒற்றை) வரிக் கொள்கை பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இதன் மூலம், சிகரட்டுகளை கொள்வனவு செய்யும் திறன் குறைக்கப்பட்டு, புகையிலை பாவனை குறைவடைவதற்கு காரணியாகவும் அமைகின்றது. மேலும், பாவனையாளர்கள் குறைந்த விலை மாற்று புகைப்பொருட்களுக்கு மாறுவதை தடுக்கும் ஒரு பயனுள்ள அணுகுமுறையாகவும் இது கருதப்படுகிறது.




2000 முதல் 2025 வரை மொத்த சிகரட் உற்பத்தியில் ஒரு அளவிற்கு குறையும் போக்கு காணப்பட்டாலும், இலங்கை புகையிலை நிறுவனத்தின் இலாபம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. இது இலங்கையின் சிகரட் வரி கொள்கையில் பாரிய குறைபாடு காணப்படுகின்றமையை தெளிவாக காட்டுகிறது.

## பிரதான பரிந்துரைகள்

- **பணவீக்கம் மற்றும் வருமான உயர்வுகளுக்கு ஏற்ப புகையிலை வரிகளை அதிகரித்தல்.**
- **ஒரே மாதிரியான புகையிலை வரி (ஒற்றை வரி) அமைப்பை அறிமுகப்படுத்துதல்.**
- **NATA சட்ட திருத்தங்களை (தனி சிகரட் விற்பனைத் தடை மற்றும் வெற்றுப் பொதியிடல் அறிமுகம்) செயல்படுத்துதல்.**
- **"புகையிலை இல்லா தலைமுறை" கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.**
- **புகையிலை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முயற்சிகளின் கீழ் "குறைந்தளவிலான பாதிப்பு" (harm reduction) என்ற கருத்தினை ஏற்றுக்கொள்ளாது நிராகரித்தல்**
- **புகையிலைத் தொழில்துறை தலையீடுகளுக்கு எதிரான சட்ட அமுலாக்கத்தையும், சமூக நடவடிக்கைகளையும் வலுப்படுத்துதல்.**